சென்னை சுதந்திர தின அருங்காட்சியகத்துக்கு

அரிய பொருட்களை வழங்க மக்களுக்கு வேண்டுகோள்

● **ஈரோடு**

சென்னையில் அமைய உள்ள சுதந்திர தின அருங்காட்சியகத்துக்கு சுதந்திரப் போராட்டம் தொடர்பான அரிய பொருட்களை வழங்கலாம், என பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஈரோடு அருங்காட்சியக காப்பாட்சியர் பா.ஜென்சி வெளியிட்ட செய்திக்குறிப்பு

இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில், தமிழகத்தின் தியாகத்தையும், பங்களிப்பையும் போற்றும் வகையில் சுதந்திர தின அருங்காட்சியகம் அமைக்கப்படும் என 75-வது சுதந்திர தினவிழா உரையின் போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

இதன்படி, சென்னை மெரினா கடற்கரையின் எதிரில், பாரம்பரியக் கட்டிடமான ஹிமாயூன் மஹால் கட்டிடத்தில் பெரிய அளவில் அருங்காட்சியகம் அமைக்கப்படவுள்ளது.

இந்த அருங்காட்சியகம் சிறப்பாக அமைந்திட, பொதுமக்கள் தங்கள் வசம் உள்ள சுதந்திரப் போராட்டம் குறித்த பழங்கால ஆவணங்கள், கையெழுத்துப் பிரதிகள், செய்தித்தாள்கள், சிறை வில்லைகள், ராட்டைகள், பட்டயங்கள், ஐஎன்ஏ சீருடைகள் ஐஎன்ஏ அஞ்சல் தலை மற்றும் ரூபாய் நோட்டுகள் போன்றவற்றை நன்கொடையாக அளிக்கலாம்.

பொதுமக்கள் தங்கள் வசம் உள்ள அரிய பொருட்களை சென்னை அல்லது ஈரோடு மாவட்ட அருங்காட்சியகங்களுக்கு நேரடியாக சென்று வழங்கலாம். இவ்வாறு வழங்கப்படும் பொருட்களுக்கு உரிய ஒப்புகைக் கடிதம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் அருங்காட்சியக ஆணையரால் வழங்கப்படும்.

இவ்வகையான அரிய பொருட்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும் போது அதை வழங்கியவர்களின் பெயர்களும் இடம்பெறும். மேலும் விவரங்களுக்கு 9486861397 என்ற செல்போன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வேப்பனப்பள்ளியில் பேருந்து நிலையம் இருந்தும் பயனில்லை

சாலையோரம் நிறுத்தப்படும் பேருந்துகளால் மக்கள் அவதி

● பல ஆண்டுகளாக நீடிக்கும் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமா?

N.S.V STEEL MAART பாத்திரக்கடை
SINCE 1989

↑ வேப்பனப்பள்ளி பேருந்து நிலையத்துக்குள் பேருந்துகள் வராததால், பேரிகை சாலையில் பேருந்துக்காக காத்திருக்கும் பெண்கள்.

● **கிருஷ்ணகிரி**

வேப்பனப்பள்ளி பேருந்து நிலையத்துக்குள் பேருந்துகள் வருவதில்லை. மாறாகப் பேருந்து நிலையத்தின் வெளியில் சாலையோரத்தில் பேருந்துகளை நிறுத்தி பயணிகளை ஏற்றி, இறக்குவதால், கோடை வெயிலில் மக்கள் சிரமத்தைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆந்திர, கர்நாடக மாநில எல்லையில் வேப்பனப்பள்ளி உள்ளது. இதனால், இப்பகுதியில் தினசரி இரு மாநிலத்துக்கு செல்லும் கனரக வாகனங்கள் உள்ளிட்ட வாகனப் போக்குவரத்தும், மக்கள் நெரிசலும் அதிகம் இருக்கும். இந்நிலையில், பயணிகள் வசதிக்காகக் கடந்த 2010-ம் ஆண்டு வேப்பனப்பள்ளி-பேரிகை சாலையில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டது. இங்கு பயணிகளுக்காக இருக்கை, தொலைக்காட்சி, கழிப்பிடம் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

ஆனால், கடந்த பல ஆண்டுகளாக பேருந்து நிலையத்துக்குள் எந்த பேருந்துகளும் வருவதில்லை. மாறாகப் பேருந்து நிலையத்தின் வெளியே பேரிகை சாலையோரத்தில் பேருந்துகளை நிறுத்தி பயணிகளை ஏற்றி, இறக்கி வருகின்றனர். இதனால் மக்கள் சிரமத்தைச் சந்தித்து வருகின்றனர்.

தற்போது, கோடை வெயிலால் வெப்ப அலை வீசி வரும் நிலையில், சாலையோரத்தில் பேருந்துக்காக திறந்தவெளியில் பயணிகள் நிற்க முடியாமல் பரிதவித்து வருகின்றனர். குறிப்பாக, சிறுவர்கள், பெரியவர்கள் மற்றும் நோயாளிகள் சிரமத்தைச் சந்திக்கின்றனர்.

குறிப்பாக வேப்பனப்பள்ளியைச் சுற்றியுள்ள கிராமங்களுக்குச் செல்ல குறிப்பிட்ட நகரப் பேருந்துகள் மட்டும் உள்ள நிலையில், நீண்ட நேரம் பேருந்துக்கு சாலையோரம் நிற்க முடியாமல் அருகில் உள்ள நிழல் பகுதிக்குச் செல்லும் கிராம மக்கள் பேருந்துகளை அடிக்கடி தவற விடும் நிகழ்வுகளும், பேருந்துகளில் இருக்கை கிடைக்காமல் படிக்கட்டுகளில் தொங்கியபடி செல்லும் நிலையும் ஏற்படுவதாகக் கிராம மக்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இதுதொடர்பாக கிராம மக்கள் சிலர் கூறியதாவது:

வேப்பனப்பள்ளியைச் சுற்றியுள்ள கிராமத்தில் வசிக்கும் நாங்கள் பல்வேறு தேவைக்கும் வேப்பனப்பள்ளிக்கு வந்து செல்கிறோம். கிராமங்களுக்குக் குறிப்பிட்ட பேருந்துகள் மட்டுமே உள்ளதால், கிராமங்களுக்குச் செல்லும் பேருந்துகளில் அதிக கூட்டம் எப்போதும் இருக்கும்.

ஆனால், பேருந்து நிலையத்துக்குள் பேருந்துகள் வருவதில்லை. இதனால், கால்கடுக்கச் சாலையோரத்தில் வெயில் மற்றும் மழைக்கு நிற்க வேண்டிய நிலை பல ஆண்டுகளாகத் தொடர்கிறது.

இதுதொடர்பாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கும்போது மட்டும், ஓரிரு வாரங்கள் பேருந்து நிலையத்துக்குள் பேருந்துகள் வருகின்றன. அதன் பின்னர் சாலையோரத்தில் பேருந்துகளை நிறுத்துவது நீடிக்கிறது.

எனவே, நிரந்தரமாக அனைத்துப் பேருந்துகளையும், பேருந்து நிலையத்துக்கு வந்த செல்ல மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

அரூர் பகுதியில் பலத்த காற்றுடன் இரண்டாவது நாளாக கனமழை

▶ மரங்கள், மின் கம்பங்கள் முறிந்ததால் போக்குவரத்து பாதிப்பு

↑ அரூர் அடுத்த கீரைப்பட்டி அருகே பலத்த காற்றுடன் பெய்த கன மழையால் முறிந்து விழுந்த வாழை மரங்கள். படம்: எஸ். செந்தில்

● **அரூர்**

அரூர் பகுதியில் நேற்று இரண்டாவது நாளாக பலத்த காற்றுடன் கனமழை பெய்தது. ஆயிரக்கணக்கான வாழை மரங்கள், 40-க்கும் மேற்பட்ட மின்கம்பங்கள் முறிந்து விழுந்தன.

தருமபுரி மாவட்டம் அரூர் பகுதியில் நேற்று முன்தினம் மாலை முதல் இரவு வரை பலத்த காற்றுடன் மழை பெய்தது. கீரைப்பட்டி, அச்சல் வாடி, குடுமியாம் பட்டி, தீர்த்தமலை, மொரப்பூர், கடத்தூர் ஆகிய சுற்று வட்டார பகுதிகளில் இடி மின்னல், பலத்த காற்றுடன் கனமழை பெய்தது. இதில் கீரைப்பட்டி, கெலாப்பாறை, அச்சல் வாடி ஆகிய பகுதிகளில் 20-க்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் பயிரிட்டிருந்த வாழை மரங்கள் முறிந்து விழுந்து சேதமடைந்தன. அறுவடைக்கு தயாராக இருந்த ஆயிரக் கணக்கான வாழை மரங்கள் சேதமடைந்ததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

மேலும், கோபிநாதம்பட்டி அருகில் 4 மின்கம்பங்கள் உட்பட 10-க்கும் மேற்பட்ட மின்கம்பங்களும் முறிந்தன. இதனால் மின் விநியோகம் பாதிக்கப்பட்டது. அரூரில் இருந்து சித்தேரி செல்லும் சாலையில் ஆங்காங்கே மரங்கள் முறிந்து சாலையில் விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. வருவாய்த் துறையினர் சம்பவ இடங்களுக்குச் சென்று மரங்களை அகற்றி சீர் செய்தனர்.

பொம்மிடி அடுத்த ரேகடஅள்ளி, ஓபிளிநாய்க்கன அள்ளி, கொக்கராப்பட்டி, தாதனூர், திப்பிரெட்டிஅள்ளி, கந்தன் கவுண்டன் கொட்டாய் உள்ளிட்ட கிராமங்களில் 13 வீடுகளின் சுவர் மற்றும் மேற்கூரைகள் இடிந்து சேதமடைந்தன. சுரக்காய் பட்டியில் பள்ளி சுற்றுச்சுவர் இடிந்து விழுந்தது. திப்பிரெட்டிஅள்ளி, கொண்டகரஅள்ளி, வத்தல் மலையடிவாரம் உள்ளிட்ட பகுதிகளில் 30-க்கும் மேற்பட்ட மின் கம்பங்கள் உடைந்து விழுந்தன. அவற்றை மின்வாரிய ஊழியர்கள் சரி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று மாலையும் அரூர், பாப்பிரெட்டிப்பட்டி வட்டாரங்களில் பல இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்தது. இடி மின்னல் தாக்குதல் அதிகமாக இருந்ததால் மாலை முதல் இரவு வரை பல்வேறுப் பகுதிகளில் மின் விநியோகம் நிறுத்தப்பட்டது. கோடை வெயில் சுட்டெரித்து வந்த நிலையில் கடந்த 2 நாட்களாக பெய்யும் மழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஈரோடு வாக்கு எண்ணும் மையத்தில்

கூடுதலாக 6 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தம்

● **ஈரோடு**

ஈரோடு மக்களவைத் தொகுதி வாக்கு எண்ணும் மையத்தில், கூடுதலாக 6 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ஈரோடு மக்களவைத் தொகுதிக்கு உள்பட்ட ஈரோடு கிழக்கு, ஈரோடுமேற்கு, மொடக்குறிச்சி, காங்கேயம், தாராபுரம் மற்றும் குமாரபாளையம் என6 தொகுதிகளில் வாக்குப்பதிவு செய்யப்பட்ட இயந்திரங்கள் சித்தோடு அருகே உள்ள அரசு பொறியியல் கல்லூரியில் வைக்கப்பட்டுள்ளன.

கல்லூரி வளாகத்தில் 24 மணி நேரமும் 4 அடுக்கு போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். வருகின்றனர்.

கல்லூரி வளாகத்தில் 221 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு 24 மணி நேரமும் தீவிர கண்காணிப்பு மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், கடந்த 29 -ம் தேதி ஈரோடு மேற்கு சட்டப்பேரவை தொகுதி வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறையில் ஒரு சிசிடிவி கேமரா பழுதாகி பிறகு சீரமைக்கப்பட்டது. இதுபோல் கடந்த 30-ம் தேதி குமாரபாளையம் சட்டப்பேரவை தொகுதி வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறையின் கண்காணிப்பு கேமராவுடன் இணைக்கப்பட்டிருந்த தொலைக்காட்சி திரையில் பழுது ஏற்பட்டு பிறகு சீரமைக்கப்பட்டது.

தனி கட்டுப்பாட்டு கருவி

இதுபோன்று பழுதுகள் ஏற்பட்டாலும் காட்சிகளை பதிவு செய்வதில் சிக்கல் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப் பட்டுள்ள 6 அறைகளின் முன்பு தனியாக சிசிடிவி கண்காணிப்பு கேமராக்கள் நேற்று பொருத்தப் பட்டன.

இந்த கேமராக்களுக்கு தனியாக கட்டுப்பாட்டு கருவி அமைக்கப்பட்டு கட்டுப்பாட்டு அறையில் தனியாக தொலைக்காட்சி அமைக்கப் பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இதன் மூலம், பிரதான கேமராக்களில் பழுது ஏற்பட்டாலும், இந்த கேமராவில் உள்ள பதிவுகள் மூலம் பிரச்சினை இல்லாமல் கண்காணிப்பை தொடர முடியும் என தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பேரிகை வழியாக வேலூருக்கு கடத்த முயன்ற

267 கிலோ குட்கா காருடன் பறிமுதல்

● **ஓசூர்**

பேரிகை எஸ்ஐ சிவக்குமார் தலைமையிலான போலீஸார், நரசிம்மா கோயில் சந்திப்பு அருகே நேற்று முன்தினம் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, அவ்வழியாக வந்த காரை நிறுத்தினர். ஆனால், காரை ஓட்டுநர் நிறுத்தவில்லை.

இதனால், சந்தேகம் அடைந்த போலீஸார், தங்கள் வாகனத்தில், காரைத் துரத்திச் சென்றனர். அப்போது, கார் சாலையோரப் பள்ளத்தில் இறங்கிய நிலையில், காரை இயக்க முடியாமல், ஓட்டுநர் காரிலிருந்து இறங்கித் தப்பி ஓடினார்.

இதையடுத்து, காரில் போலீஸார் சோதனை செய்தபோது, அதில் 267 கிலோ தடை செய்யப்பட்ட குட்கா உள்ளிட்ட புகையிலைப் பொருட்கள் மற்றும் மதுபாட்டில்கள் இருந்தன. இதையடுத்து, காருடன் குட்கா உள்ளிட்டவற்றைப் பறிமுதல் செய்தனர். மேலும், இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்து, காரின் பதிவு எண் அடிப்படையில் அதன் உரிமையாளர் மற்றும் தப்பி ஓடிய ஓட்டுநர் குறித்து விசாரித்து வருகின்றனர்.

ஓசூர் பகுதியில் கடந்த 6 மாதங்களாக பொது இடங்களில் பொதுமக்கள் நிறுத்திச் செல்லும் விலை உயர்ந்த இருசக்கர வாகனங்களை மர்ம நபர்கள் திருடிச் செல்வது அடிக்கடி நடந்து வந்தது.

இதுதொடர்பாக எஸ்பி தங்கதுரை மற்றும் ஓசூர் டிஎஸ்பி பாபு பிரசாந்த் ஆகியோரின் உத்தரவின் பேரில், சிப்காட் இன்ஸ்பெக்டர் பிரகாஷ் தலைமையில் தனிப்படை அமைத்து இருசக்கர வாகனத் திருட்டில் ஈடுபட்ட குற்றவாளிகளைத் தேடி வந்தனர். மேலும், இருசக்கர வாகனங்கள் திருடு நடந்த இடங்களில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராப் பதிவுகளை தனிப்படையினர் ஆய்வு செய்தனர்.

இதன் அடிப்படையில், இருசக்கர வாகனங்களைத் திருடிய தருமபுரி மாவட்டம் பாலக்கோடு சந்தோஷ் குமார் (19) மற்றும் 17 வயதுள்ள இரு சிறுவர்களை நேற்று முன்தினம் போலீஸார் கைது செய்தனர். மேலும், அவர்களிடமிருந்து 15 இருசக்கர வாகனங்களைப் பறிமுதல் செய்தனர்.

rakeshh.sridhar@hindutamil.c

BENEFITS OF
ALAGRAMAM, SIDDHA MALA AND OTHER
GEMSTONE TREES

↑ சேலம் சகாதேவபுரம் சங்கர் நகரில் உள்ள ரோட்டரி ஹாலில் ராஜஸ்தான் கைவினைப் பொருட்கள் கண்காட்சி நடைபெறுகிறது.

சேலத்தில் ராஜஸ்தான் கைவினைப் பொருட்கள் கண்காட்சி

● **சேலம்**

சேலம் சகாதேவபுரம் சங்கர் நகரில்உள்ளரோட்டரிஹாலில் ராஜஸ்தான் கைவினைப் பொருட்கள் கண்காட்சி இன்று நிறைவுறுகிறது.

இதுகுறித்து கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளர் கூறியதாவது:

ராஜஸ்தான் கலை கண்காட்சியில் இந்தியாவின் சிறந்த கைவினை கலைஞர்களின் படைப்புகளை நேரடி விற்பனைக்கு கொண்டு வந்துள்ளோம். இங்கு வண்ணமயமான ஜெய்ப்பூர் பெட்ஷீட் மற்றும் படுக்கை விரிப்புகள் கிலோ கணக்கில் விற்பனை செய்கிறோம்.

உடையாத கண்ணாடி வளையல்கள் மூன்று ஜோடி ரூ.99-க்கும், மூன்று டி - ஷர்ட்டுகள் ரூ.999-க்கும் மற்றும் 3 பலாசோ பேன்ட் ரூ.999-க்கும் விற்பனைக்கு உள்ளது. மேலும், கண்காட்சி விற்பனையில் சேலத்தில் முதல்முறையாக சென்னையின் புகழ் பெற்ற சிவாம்சம் பொருந்திய சுபிட்சம் தரும் ஆன்மிகப் பொருட்களின் அணிவகுப்பு, தரமான ருத்ராட்சை மாலை, கருங்காலி மாலைகள் (வெள்ளிக் கம்பி கட்டியது) மற்றும் சக்தி வாய்ந்த மரகத லிங்கங்கள் கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார். ●

நம்ம கோவையில்
KingMakers IAS Academy
வழங்கும்
இந்து தமிழ் திசை
உனக்குள் ஓர் ஐஏஎஸ்!
கனவுகளை நிஜமாக்கும் பயிலரங்கு!
தேதி: 12.05.2024, ஞாயிற்றுக்கிழமை | நேரம்: காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை
இடம்: பிஎஸ்ஜி காலேஜ் ஆஃப் டெக்னாலஜி, பீளமேடு, கோயமுத்தூர்.
பயிலரங்கத்தின் சிறப்பம்சங்கள்:
ஐஏஎஸ், ஐபிஎஸ் தேர்வு குறித்து அனைத்து சந்தேகங்களுக்கும் விடையளிக்கிறோம்...
◆ யுபிஎஸ்சி என்றால் என்ன ?
◆ ஐஏஎஸ் தேர்வு எழுத கல்வித் தகுதி என்ன?
◆ தேர்வுக்கு எப்படி தயார் ஆவது?
◆ என்ன புத்தகங்களைப் படிக்க வேண்டும்?
◆ பயிற்சி மையத்தின் அவசியம் என்ன?
◆ ஐபிஎஸ் ஆவதற்கு என்னென்ன உடற்தகுதிகள் வேண்டும்?
வாழ்க்கையையே மாற்ற வாய்ப்புள்ள இந்நிகழ்வில் பங்கேற்கும் அனைவருக்கும் அனைத்து தேர்வு மாதிரி வினாத்தாள் பாடத்திட்ட கையேடு இலவசம். மூன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு இலவசப் பயிற்சிக்கும் ஏற்பாடு செய்கிறோம்!
சிறப்பு விருந்தினர்கள்
திரு. எம்.ரவி, ஐபிஎஸ்
மேனாள் டிஜிபி, தமிழக காவல் துறை
திரு. திரு. விவேக் ஹரிநாராயண், ஐஏஎஸ்
மேனாள் தலைவர் எல்காட், தமிழக அரசு.
ஊக்கவுரை
திரு. மு.முருகேசன்,
முதுநிலை உதவி ஆசிரியர், இந்து தமிழ் திசை
திரு. சத்யஸ்ரீ பூமிநாதன், CMD
கிங்மேக்கர்ஸ் IAS அகாடமி
இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் அனைவருக்கும், தகுதி தேர்வின் அடிப்படையில் 'கிங்மேக்கர்ஸ் ஐஏஎஸ் அகாடமி' நடத்தும் பயிற்சியில் சேருவதற்கு சிறப்புக் கட்டணச் சலுகை, ஐஏஎஸ் தேர்வில் வெற்றி பெற்றவர்களின் நேரடி வழிகாட்டுதல், ஆலோசனைகள் வழங்கப்படும்.
இந்நிகழ்வில் பங்கேற்க பதிவு செய்ய
https://bit.ly/uoias241
அனுமதி இலவசம்

இந்து தமிழ் திசை
உள்ளதைச் சொல்லும் செய்திகள்... நல்லதையே விரும்பும் வாசகர்கள்...!
Email: Circulation: circ@hindutamil.co.in
Advertisement: tamilads@hindutamil.co.in
நாளிதழ் சந்தாவிற்கு
7039165750
என்ற எண்ணிற்கு
மிஸ்ட் கால்
கொடுங்கள்!

UJJIVAN SMALL FINANCE BANK
பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள்2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்.	கடன் கணக்கு எண் / கடன்தாரர்/ அடமானதாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை (ரூபாயில்)	டேவணித்தொகை (EMD) (ரூபாயில்)
கிளை அலுவலகம்: கதவு எண்.356/40, SKBS டவர், பேருந்து நிறுத்தம், நாமக்கல், கச்சேரி தெரு, வேலூர் ரோடு CHB காலனி அருகில், மாதவபுரம், திருச்சேங்கோடு, தமிழ்நாடு-637211					
1.	1182210080000013 **1.Mr.முருகேசன் கண்ணையன்,** S/o.Mr.கண்ணையன், **2.Mrs.சாந்தி முருகேசன்,** W/o.Mr.முருகேசன் கண்ணையன், இருவரது முகவரி: எண்.232/290, வேல்முருகன் நகர், சேலம் மெயின் ரோடு, நாமக்கல், டைல்ஸ் ஷோரூம் எதிரில், தமிழ்நாடு- 637209.	**(i) 13.05.2021** 11.05.2021 அன்றுள்ளபடி ரூ.**12,05,642/-** (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து ஐந்தாயிரத்து அறுநூற்று நாற்பத்திரண்டு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் 17.12.2022 & நேரடியான சுவாதீனம் 05.01.2024	13.03.2024 **அன்றுள்ளபடி** **ரூ.20,87,739.01** (ரூபாய் இருபது லட்சத்து எண்பத்து ஏழாயிரத்து எழுநூற்று முப்பத்தொன்பது மற்றும் பைசா ஒன்று மட்டும்)	**ரூ.14,40,000/-** (ரூபாய் பதினான்கு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்)	**ரூ.1,44,000/-** (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்து நான்காயிரம் மட்டும்)
சொத்து விவரம் : மல்லசமுத்திரம் சார் பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட **கூத்தாநத்தம் கிராமம், திருச்செங்கோடு தாலுகா, நாமக்கல் மாவட்டம்** என்னும் முகவரியில் **புதிய S.F.எண்.168/4, P.ஹெக்டேர் 1.35.5 kist ரூ.7.36 ஏக்கர் 3.27 சென்டு மற்றும் தற்போது ஏக்கர் 0.07 ½ சென்டு இதில் 2000 சதுர அடி (புதிய சர்வே எண். 168/4A1A) நிலம்** மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு திசையில் 32 அடி, கிழக்கு மேற்காக தெற்கு திசையில் 30 ¾ அடி, வடக்கு தெற்காக கிழக்கு திசையில் 65 அடி, வடக்கு தெற்காக மேற்கு திசையில் 62 ½. எல்லைகள்: கிழக்கு மேற்கு ரோடுக்கு வடக்கு, லோகு-க்கு சொந்தமான நிலத்திற்கு தெற்கு, மாதேஷ்-க்கு சொந்தமான நிலத்திற்கு கிழக்கு, பிரசாந்த் வாங்கிய நிலத்திற்கு மேற்கு.					
கிளை அலுவலகம்: சர்வே எண்.140, நாமக்கல், 3, நான்கு ரோடு, BSNL அலுவலகம் எதிரில், வேலூர், தமிழ்நாடு-638182					
2.	1183210170000004 **1.Mrs.நதியா,** W/o.Mr.பாலாஜிகுமார், **2.Mr.பாலாஜிகுமார்,** S/o.Mr.கணபதி, **இருவரது குடியிருப்பு முகவரி,** கதவு எண்.43, கைகோலார் தெரு, பரமத்தி-வேலூர், நாமக்கல், தமிழ்நாடு-638182	**(i) 30.12.2021** 21.12.2021 அன்றுள்ளபடி ரூ.**5,45,074/-** (ரூபாய் ஐந்து லட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து எழுபத்து நான்கு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் 26.04.2022 & நேரடியான சுவாதீனம் 05.01.2024	13.03.2024 **அன்றுள்ளபடி** **ரூ.3,45,208.36** (ரூபாய் மூன்று லட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து இருநூற்று எட்டு மற்றும் பைசா முப்பத்தாறு மட்டும்)	**ரூ.11,25,000/-** (ரூபாய் பதினொன்று லட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்)	**ரூ.1,12,500/-** (ரூபாய் ஒரு லட்சத்து பன்னிரண்டாயிரத்து ஐநூறு மட்டும்)
சொத்து விவரம்: நாமக்கல் பதிவு மாவட்டம், வேலூர் சார்-பதிவாளர் அலுவலகம் எல்லைக்குட்பட்ட, பழைய நத்தம் சர்வே எண்.26/B பகுதி தற்போது நத்தம் சர்வே எண்.498/8 இதில் 0-0184.50 சதுர மீட்டர், நத்தம் செட்டில்மெண்ட் பட்டா எண்.72 படி இதில் **வேலூர் சிறப்பு கிராம பஞ்சாயத்து,** வார்டு எண்.8, கைகோலார் தெரு, டைல்டு வீடு கதவு எண்.80, வரி மதிப்பீடு எண்.2937, புஞ்சை இடையர் மேல்முகம் கிராமம் என்னும் முகவரியில் மத்தியில் உள்ள அளவுகள்: கிழக்கு மேற்கு இருபக்கமும் 37 அடி, வடக்கு தெற்கு இருபக்கமும் 21 ½ அடி ஆக மொத்தம் 795 ½ சதுர அடி வீட்டு மனை **இதில் கட்டப்பட்டுள்ள டைல்டு வீட்டின் அளவுகள்: 18 x 16 = 288 சதுர அடி அல்லது 26.75 சதுர மீட்டர் மற்றும் தெற்கு பக்கம் கட்டப்பட்டுள்ள மற்றொரு டைல்டு வீட்டின் அளவுகள்: 18x 11= 198 சதுர அடி அல்லது 18.39 சதுர மீட்டர்** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அனைத்து வசதிகள், மின்சார இணைப்பு S.C.எண். 04-2267-001-591, தண்ணீர் குழாய் இணைப்பு மற்றும் அனைத்து இதர அனுபந்த உரிமைகள். எல்லைகள்: மேற்கு: G.சாந்தி மற்றும் G.சரவணன் ஆகியோர் சொத்து, தெற்கு: செல்லம்மாள், குப்புசாமி ஆகியோர் சொத்து, வடக்கு: கிழக்கு மேற்கு பஞ்சாயத்து சந்து, கிழக்கு: பாக்கியம் சொத்து.					

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 14.06.2024 காலை 11.00 மணியிலிருந்து மதியம் 01.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: **13.06.2024** காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை
சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: **12.06.2024** காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.G.நடராஜன்: Mob: 95512 77444, Mr.கிருபாகர் ராதாகிருஷ்ணன்: Mob: 94455 08743 & Mr.R.புஷ்பகாந்த்: 98431 14222

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.பிரபாகரன் Mob: 74182 81709**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824, 25, 26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 02.05.2024
இடம்: பெங்களூரு

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்